ஆ. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் முதலமைச்சருக்கு எதிராக டேப் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினை என்னவாயிற்று? அதில் பிரைமாபேஸி கேஸ் இருக்கிறபொழுது அதை எடுத்துக் கொள்வதுதான் நியாயம். அதை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு என்ன காரணம்? கொடுத்து ஒரு வார காலம் ஆயிற்று. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்; நானும் கொடுத்திருக்கிறேன். என்னை மட்டும் அவசரம் அவசரமாக உடனே உரிமைக் குழுவிற்கு அனுப்பினார்களே. எனவே, அதையும் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் சம்பந்தமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திடீர், திடீரென்று கேட்டால் எப்படி பதில் சொல்வது? என் அறைக்கு வந்து கேளுங்கள்.

3. உரிமைப் பிரச்சினை,

வானொலியில் பேரவை நடவடிக்கை தவறாக அறிவிக்கப் பெற்றது—தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவை உரிமைப் பிரச்னை. 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 28 ஆம் நாள் அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி. சொக்கலிங்கம் அவர்கள் ''வானொலி'' மீது ஒரு ஒழுங்குப் பிரச்சனையைப் பேரவையில் எழுப்பினார். 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27 ஆம் நாள் அன்று தாம் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளாத போது அன்று மாலை ''சட்ட மன்றத்தில் இன்று'' என்ற தலைப்பில் வானொலியில் அவர் தம் உரையைப் படித்ததாக ஒலி பரப்பப்பட்டதாகக் கூறினார். அதை உரிமை மீறல் பிரச்சனையாக அறிவிப்புக் கொடுத்தால் எடுத்துப் பரிசீலிப்பதாக நான் தெரிவித்தேன். அன்றே மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் வானொலி மீது ஒரு உரிமை. மீறல் பிரச்சினைக்கான அறிவிப்பைக் கொடுத்தார். இதுகுறித்து வானொலி இயக்குநருக்கு விளக்கம் கேட்டு எழுதப்பட்டது. பேரவையில் இப் பிரச்சனை எழுப்பப்பட்டு விட்டதால் உரிமை மீறலாகப் பேரவையில் எடுக்குமுன் வானொலி இயக்குநரின் விளக்கத்தைப் பெற, இது குறித்து அவருக்கு எழுதப்பட்டது.

வானொலியிலிருந்து வந்துள்ள விளக்கத்தில் திரு. வெங்கடேசன் என்பதற்குப் பதிலாக திரு. சொக்கலிங்கம் என்று நிருபர் தவறாகக் குறிப்பிட்டார் என்றும், மேலும், 1981 ஆம்